DEPOSITION OF WITNESS

(Chapter XXVof BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 11/2026 PW 1

Name : சாபர் சாதிக் ( புகார்தாரர்)

Father's/Husband's Name : கலிபா

Village : உணவு பாதுகாப்பு அலுவலர்

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 44/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of February 2026

( புகார்தாரர் ஆஜர், எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை)**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து நத்தம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.07.2024ம் தேதி உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றிய திரு. எஸ். கண்ணன் உணவு பாதுகாப்பு அலுவலர் அவர்கள் நத்தம் வட்டார பகுதியில் ஆய்வின்போது திண்டுக்கல் மாவட்டம், அரவங்குறிச்சி, 10/220 என்ற முகவரியில் உள்ள கரந்தமலையான் பேக்கரிக்கு சென்று ஆய்வு செய்தார். ஆய்வின்போதும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உணவு பொருளாக இருந்த மிக்சர் என்ற உணவு பொருளை உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்விற்கு அனுப்பினார். பகுப்பாய்வை பெற்றுக் கொண்ட உணவு பகுப்பாய்வாளர் உணவு பொருளை பகுப்பாய்வு செய்து பாதுகாப்பற்ற உணவு என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதனடிப்படையில் மேற்படி கடையின் உரிமையாளரான திரு. ராஜேஷ், த/பெ.அழகுசாமி என்பவர் மீது குற்ற வழக்கு தொடுப்பதற்கு ஆணையாளர், சென்னை, உணவு பாதுகாப்புத்துறை, உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் தரங்கள் சட்டம் 2006ன் படி பிரிவு 59(i) எதிரி மீது

குற்ற வழக்கு மாண்புமிகு நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது. எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 13.08.2018ம் தேதிய Gazette Notification Order R.No.4049/2018/S1/FSSA ம.த.சா.ஆ.1 ஆகவும்

2. 30.05.2025ம் தேதிய திரு.கண்ணன், உணவு பாதுகாப்பு அலுவலர் அவர்கள் பணியிட மாறுதல் ஆணை (R.No.10653/2022/S12/FSD, Dt.30.05.2025) ம.த.சா.ஆ.2ஆகவும்

3. 05.07.2024ம் தேதிய உணவு மாதிரியினை விலைக்கு வாங்கிய ரொக்க ரசீது ம.த.சா.ஆ.3 ஆகவும்

4. 05.07.2024ம் தேதி எதிரிக்கு சார்பு செய்த படிவம் VA ம.த.சா.ஆ.4 ஆகவும்

5. 05.07.2024ம் தேதியிட்ட NABL கடிதம் ம.த.சா.ஆ.5 ஆகவும்

6. 05.07.2024ம் தேதி படிவம் VI ம.த.சா.ஆ.6 ஆகவும்

7. 05.07.2024ம் தேதி மாதிரி முத்திரை பதித்த படிவம் ம.த.சா.ஆ.7 ஆகவும்

8. 05.07.2024ம் தேதிய உணவு பகுப்பாய்வாளருக்கு, உணவு மாதிரி அனுப்பிய கூரியர் ரசீது ம.த.சா.ஆ.8 ஆகவும்

9. 05.07.2024ம் தேதி படிவம் VI (ம) மாதிரி முத்திரை பதித்த படிவம் அனுப்பிய ரசீது ம.த.சா.ஆ.9 ஆகவும்

10. 05.07.2024ம் தேதிய நியமன அலுவலருக்கான தகவல் படிவம் ம.த.சா.ஆ.10 ஆகவும்

11. 05.07.2024ம் தேதிய நியமன அலுவலரின் ஏற்பளிப்பு கடிதம் ம.த.சா.ஆ.11 ஆகவும்

12. 20.07.2024ம் தேதி உணவு பகுப்பாய்வாளரின் பகுப்பாய்வு அறிக்கை ம.த.சா.ஆ.12 ஆகவும்

13. 31.07.2024ம் தேதி நியமன அலுவலர் எதிரிக்கு அனுப்பிய உணவுப் பகுப்பாய்வு அறிக்கை குறித்த கடிதம் ம.த.சா.ஆ.13 ஆகவும்

14. 01.08.2024ம் தேதி மாநில உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி அனுப்பப்பட்ட நியமன அலுவலரின் கடிதம் ம.த.சா.ஆ.14 ஆகவும்

15. 18.12.2025ம் தேதிய ஆணையர், தமிழ்நாடு உணவு பாதுகாப்பு (ம) மருந்து நிர்வாகத்துறை, சென்னை அவர்களின் ஆணை ம.த.சா.ஆ.15 ஆகவும்

16. A.ராஜேஷ் என்பவரது ஆதார் நகல் ம.த.சா.ஆ.16 ஆகவும்

மேற்படி ஆவணங்கள் ம.த.சா.ஆ.1 முதல் ம.த.சா.ஆ.16ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.26 16:44:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்